10/=

பக்கங்கள் 04

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 02 | அதிர்வு 34 | ஞாயிற்றுக்கிழமை 03 ஜூன் 2018 | ethirolimedia@gmail.com | 021 224 38 18

# சரணடைந்தோர் பட்டியலை வெளியிடத் தயார்

## சாலிய பீரிஸ் அதிரடி அறிவிப்பு




முல்லைத்தீவு, ஜூன் 03

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது படையினரிடம் சரணடைந்தோரின் விபரங்களை எழுத்து மூலம் வழங்குமாறு தம்மிடம் கோரிக்கை விடுக்கப்பட்டால் அவற்றை வெளியிடத் தயாராக உள்ளதாக காணாமல் போனோர் அலுவலகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

காணாமல் போனோர் அலுவலகத்தின் இரண்டாம் கட்ட செயற்பாடுகள், முல்லைத்தீவில் நேற்று இடம்பெற்றன.

இந்த அமர்வை புறக்கணித்து காணாமல் போனோரின் உறவுகள் போராடியதோடு, சரணடைந்தோரின் பெயர்ப்பட்டியலை வெளியிடவேண்டும், அதன் பின்னர் நாம் 3▶



## யாழில் மீண்டும் டெங்கு அபாயம்

கொழும்பு,ஜூன் 03

டெங்கு நோய்த் தொற்று ஆபத்து அதி உச்சமாக உள்ள 12 மாவட்டங்களில் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களும் அடங்கியுள்ளதாக இலங்கை நோய்தொற்றியல் பிரிவு எச்சரித்துள்ளது.

இதுதொடர்பில் நோய்த்தொற்றியல் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில், யாழ்ப்பாணம் திருகோணமலை, கொழும்பு, 3▶

## ராஜபக்சக்கள் பனிப்போர் அடுத்த வேட்பாளர் பீரிஸ்?

கொழும்பு,ஜூன் 03

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் சிறிலங்கா பொதுஜன முன்னணியின் வேட்பாளராக, கட்சியின் தலைவராக உள்ள பேராசிரியர் ஜி.எல்.பீரிஸை நிறுத்துவதற்கு, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச முடிவு செய்துள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக ராஜபக்ச குடும்பத்துக்குள் ஏற்பட்டுள்ள பனிப்போரை அடுத்தே, மகிந்த ராஜபக்ச இந்த முடிவை எடுத்துள்ளார் என்று, அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. 3▶

## வர்த்தமானி முன்னே விவாதம் பின்னே

கொழும்பு,ஜூன் 03

சட்டமா அதிபர் ஆராய்ந்ததன் பின்னர் 20 ஆவது திருத்த சட்டத்தை வர்த்தமானியில் பிரசுரிக்க முடியும் என நாடாளுமன்ற பிரதி செயலாளர் நாயகம் நீல் இத்தாவல தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியினால் 20 ஆவது அரசியலமைப்பு திருத்தம் நாடாளுமன்ற செயலாளிரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் ஐந்தாம் திகதி விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன. 3▶

## வன்னி மக்களுக்கு அதிகரிக்கும் மன அழுத்தம்

வன்னி,ஜூன் 03

வன்னியில் 30 சதவீதமாக இருந்த மன அழுத்தம் கொண்டோரின் எண்ணிக்கை, யுத்தம் நிறைவடைந்த பின்னர் 48 சதவீதமாக அதிகரித்திருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக சிறார்களும் அதிகளவில் இதனால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

முன்னாள் யுத்தப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் பெருமளவில் மன அழுத்தம் உள்ளிட்ட உளரீதியான தாக்கங்களுக்கு ஆளாகியுள்ளனர். 3▶

## டெங்கால் பறிபோனது குடும்பஸ்தரின் உயிர்

கிளிநொச்சி,ஜூன் 03

கிளிநொச்சி மாவட்டத்தில், தருமபுரம் - உழவனூர் பகுதியில் குடும்பஸ்தர் டெங்குக் காய்ச்சலால் பலியாகியுள்ளார்.

கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் காலை ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இந்த குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

10 நாட்களுக்கு முன்னர் கொழும்புக்குச் சென்றிருந்த இவர் கடந்த 5 நாட்களாக காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த நிலையில் பிரதேசத்திலுள்ள தனியார் மருந்தகம் ஒன்றில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். அதன் பின்னரே நேற்றுமுன்தினம் 3▶

## 100 நாள் வேலைத்திட்டம் தனிநபர் தயாரித்தது அல்ல

### ஜனாதிபதிக்கு ஜயம்பதி பதிலடி

கொழும்பு,ஜூன்.03

ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை பொது வேட்பாளராக களமிறக்கிய தரப்பினரே, 100 நாள் வேலைத்திட்டத்தை உருவாக்கினர் என்றும் அது தனிநபர் தயாரித்த திட்டம் அல்ல எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்ரமரத்ன தெரிவித்துள்ளார். 3▶

## புதிய கட்சி வேண்டாம் தலைமையை மாற்றுங்கள்

கிளிநொச்சி,ஜூன் 03

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் புதிய கட்சியொன்றை தொடங்குவதை விடுத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமையை மாற்றுவதே நல்லது என புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சி தெரிவித்துள்ளது.

கிளிநொச்சியில், புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியினர் ஏற்பாடு செய்த ஊடக சந்திப்பின்போது அதன் தலைவர் கந்தசாமி இன்பராசா மேற்கண்டவாறு தெரிவித்தார். 3▶

## கடத்தப்பட்ட குழந்தை புதுக்குடியிருப்பில் மீட்பு



வவுனியா, ஜூன் 03

வவுனியாவில் கடந்த வியாழக்கிழமை அதிகாலை கடத்தப்பட்ட 8 மாதக் குழந்தை முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தக் குழந்தையை மறைத்து வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் பெண்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

வவுனியா குட்செட் வீதி 1ம் ஒழுங்கையில் உள்ள வீடொன் 3▶

## பொன்சேகாவின் அமைச்சுக்கு மலைக்க வைக்கும் வாடகை



கொழும்பு,ஜூன் 03

அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் பிரதேச அபிவிருத்தி மற்றும் வனவிலங்குகள் அமைச்சின் ராஜகிரிய அலுவலகக் கட்டடம் மாதம் 11.7 மில்லியன் ரூபா வீதம் 5 ஆண்டுகள் குத்தகையாக 702 மில்லியன் ரூபா செலுத்தும் உடன்படிக்கைக்கு பெறப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த தகவலை சிங்கள ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது.

தனியார் நிறுவனத்தின் இந்த கட்டடத்தை 5 ஆண்டுகள் குத்தகை உடன்படிக்கையில் பிரதேச அபிவிருத்தி அமைச்சு 2016 ஜூன் 5ஆம் 3▶

## போராட்டத்துக்கு தயாராகுங்கள்

### மக்களுக்கு சுமந்திரன் அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 03

வடமராட்சி கிழக்கில் தங்கியுள்ள தென்பகுதி மீன்வர்களை எதிர்வரும் 5 ஆம் திகதிக்குள் மத்திய கடற்றொழில் அமைச்சர் வெளியேற்றவேண்டும். அவ்வாறு இல்லையேல் அடுத்த நாள் பாரிய போராட்டம் ஒன்றை நடத்த மக்களைத் தயாராகுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அழைப்பு விடுத் 3▶







# காணாமல் போனோர் அலுவலகம் தேவையில்லை

## முல்லைத்தீவில் போராட்டம்

முல்லைத்தீவு, ஜூன் 03

காணாமல் போனோர் அலுவலகம் தேவையில்லை என வலியுறுத்தி முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த காணாமல் போனோரின் உறவினர்கள் போராட்டம்ஒன்றை முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் முன்பாக நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் போனோர் அலுவலகத்தின் அமர்வு நேற்றுக் காலை 9 மணிக்கு ஆரம்பமானது. இந்த நிலையிலேயே குறித்த போராட்டம் இடம்பெற்றுள்ளது.

இவர்களின் போராட்டத்தைப் பார்வையிட்ட காணாமல் போனோர் அலுவலகத் தலைவர் உள்ளிட்ட அணியினர், குறித்த போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் கலந்துரையாடினர்.

இதன்போது, அந்த மக்களைக் கலந்துரையாடலில் பங்கேற்குமாறு கூறியுள்ளனர். இருப்பினும், காணாமல் போனோரின் உறவுகள் அதற்கு மறுப்பு தெரிவித்தனர்எனக்கூறப்படுகின்றது. (ஆ)

# கோத்தபாயவுக்கு அஞ்சவில்லை

## ஹரீசன் அதிரடி

கொழும்பு, ஜூன் 03

முன்னாள்பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடலாம் என்பது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி அஞ்சவில்லை என அமைச்சர் பீ. ஹரீசன் தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

“2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் கோத்தபாய ராஜபக்ச பிரசாரம் செய்தார். மகிந்த, கோத்தபாய,பசில் என மூவரும் 2015 ஆம் ஆண்டு தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டபோதிலும் அவர்கள் தோற்றனர். கோத்தபாய ஒரு திருப்புமுனையில்லை. நாங்கள் உரிய வேட்பாளரை உரிய தருணத்தில் அறிவிப்போம்.

ஐக்கிய தேசியக் கட்சி அச்சமடையவில்லை. எங்களுக்கு எவரும் சவாலில்லை. 2015 ஆம் ஆண்டு கோத்தபாய பாதுகாப்பு செயலாளராக காணப்பட்டார், அவர் அவ்வேளை எங்களுக்கு சவாலாக விளங்கினார். ஆனால், அவர் தற்போது சாதாரண மனிதர்.” என அவர் மேலும் தெரிவித்தார். (ஆ)



# 20 ஆவது திருத்தம் மீதான எதிர்பார்ப்பு கானல்நீர்

## சொல்கிறார் விஜயதாஸ

கொழும்பு, ஜூன் 03

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம், நாட்டைச் சீர்குலைக்கும் வகையில் முன்வைக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போதைய அரசியல் சூழ்நிலையில் 20 ஆவது திருத்தம் மீதான எதிர்பார்ப்பு கானல்நீர் போன்றதாகும் என்று உயர் கல்வி மற்றும் கலாசார அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச அஸ்கிரி விகாரைக்கு நேற்றுமுன்தினம் சென்று அஸ்கிரி மகாநாயக்க வறகாகொட ஸ்ரீஞானரத்ன தேரர் உட்பட சங்கசபை உறுப்பினர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

“2020 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட உள்ள அபேட்சகர் குறித்துப் பலரும் பல்வேறுபட்ட கருத்துகளைத் தெரிவித்து வருகின்றனர். எனினும், நாம் எதிர்வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதி அபேட்சகர் யாரெனத் தெரிவிப்போம்.” எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)

# கோத்தாவின் வழக்கிலிருந்து 4ஆவது நீதிபதியும் விலகல்

கொழும்பு, ஜூன் 03

தாம் கைது செய்யப்படுவதைத் தடுக்குமாறு கோரி முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஸ தாக்கல் செய்த மனு மீதான விசாரணைகளில் இருந்து விலகுவதாக உயர் நீதிமன்ற நீதியரசர் முர்து பெர்னாண்டோ அறிவித்துள்ளார். குறித்த வழக்கில் இருந்து விலகியுள்ள நான்காவது நீதிபதி இவராவார்.

இதையடுத்து, குறித்த மனுவை மற்றொரு நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் எடுத்துக் கொள்வதற்காக எதிர்வரும் நவம்பர் மாதம் 27 ஆம் திகதி வரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கோத்தாபய ராஜபக்ஷவினால் தாக்கல் செய்யப்பட்ட குறித்த மேன்முறையீட்டு மனுவை பரிசீலனைக்கு உட்படுத்திய உயர் நீதிமன்ற நீதியரசர் ஈவா வனசுந்தர மற்றும் சரத் ஆப்ரு ஆகியோர், அவர் கைது செய்யப்படுவதை தடுக்கும் வகையில் இடைக்கால தடையுத்தரவை ஏற்கனவே விதித்திருந்தனர்.

இந்த இடைக்கால தடையுத்தரவை பிறப்பித்ததன் பின்னர் உயர் நீதிமன்ற நீதியரசர் ஈவா வனசுந்தர இந்த வழக்கில் இருந்து விலகினார். இதன் பின்னர் பிரதம நீதியரசரால் நியமிக்கப்பட்ட நீதியரசர் குழாமில் இருந்த புவனேகு அளுவிகாரே மற்றும் பிரசன்ன ஜயவர்தன ஆகிய நீதியரசர்கள் தனிப்பட்ட காரணங்களுக்காக வழக்கில் இருந்து விலகினர்.

# விகிதாசார முறைப்படியே மாகாண சபைத் தேர்தல்

## ஐ.தே.க. தீர்மானம்



கொழும்பு, ஜூன் 03

மாகாண சபைத் தேர்தலை, விகிதாசார முறைமைப்படியே நடாத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளதாக அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

பலப்பிட்டிய ரேவத்த தேசிய பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு, ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதில் அளிக்கும்போதே கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

“புதிய தேர்தல் முறையில் சிக்கல் இருப்பதாக அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள் மற்றும் துறைசார் நிபுணர்கள் ஆகியோர் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில், கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தின் போது அது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. எனவே, புதிய தேர்தல் முறையில் பிரச்சினை இருக்குமாயின், விகிதாசார முறையில் தேர்தலை நடத்துவது குறித்து அவதானம் செலுத்தப்பட்டது.

புதிய தேர்தல் முறையூடாக வெற்றியீட்டிய கட்சிகளால் கூட சுயதீனமாக ஆட்சியமைக்க முடியாமை உள்ளிட்ட பல்வேறு சிக்கல் நிலை உள்ளது. எனவே, அது தொடர்பில் தேவையான திருத்தங்கள் முன்வைக்கும் வரையில் தேர்தலை விகிதாசார முறையில் நடத்த வேண்டும். மேலும்ஐக்கிய தேசியக் கட்சி தற்போது தேர்தலுக்குத் தயாராகி உள்ளது. எந்த நேரத்திலும் தேர்தலை எதிர்கொள்வதற்கு எமது கட்சி ஆயத்தமாக உள்ளது.”என்றும்அவர்கூறியுள்ளார். (ஆ)



# எரியிறது எரியட்டும். விட்டிட்டுப் போய் வேறை அலுவல் இருந்தால் பாருங்கோ

நேற்றைக்கு என்ன நாள் எண்டது ஞாபகமிருக்கோ? எண்டு முதலீட்டைக் கேட்டன். அவர் நினைச்சார் எங்கடை இல்லாட்டித் தங்கடை வீட்டிலை உள்ள ஆருக்கேன் பிறந்த நாள் எண்டதைக் கேக்கிறன் எண்டு. அவருக்கு யாழ்ப்பாண லைப்ரறி எரிச்சது எண்ட விசியம் மறந்து போச்சு. முதலிக்கு மட்டுமில்லை. உங்கை கனபேருக்கு அப்பிடித்தான். அவன் ஆக்களைக் கொண்டு வந்து எரிச்சுப்போட்டுப் பிறகு காடாத்துக்கு அள்ளிக் கடலிலை கரைச் சமாதிரிச் சாம்பலை அள்ளிப் போட்டு வெள்ளை அடிச்சுக் குப்பைமாதிரிக் கொண்டு வந்து சனத்துக்க விளங்காத புத்தகத்தை வைச்சுப் படியுங்கோவன் எண்டு விட்டிருக்கிறான். அதோடை அவன் எரிச்சதை...... நல்ல நல்ல பெறுமதியான புத்தகங்கள் எரிஞ்சதை...... சனம் மறந்து கன நாளாப் போச்சுது. அதுதான் காலமை பேப்பர் கடையிலை சொல்லிச்சினம் இண்டைக்கு லைப்ரறி எரிச்சு 37வருசங்களாப் போச்சுது எண்டு. அதுக்கு நான் சொன்னன் எரிச்சதைச் சனம் மறந்து இண்டைக்கு 37வருசம் எண்டு.

இந்த நாளிலை ஆருக்கு உதெல்லாம் ஞாபகம் இருக்கு. பெடி பெட்டையள் எண்டால் தங்கடை சோடியளின்ரை பிறந்த நாளும், வலன்ரயின் டேயும் தான் ஞாபகமிருக்கும். இல்லாட்டி ஆரேன் திட்டினதையும் ஞாபகத்திலை வைச்சிருப்பினம். முக்கியமானதொண்டும் ஞாபகத்திலை இருக்காது. வெள்ளைக்காரன் எண்டால் உப்பிடிப்பட்ட நாளிலை அந்த இடத்துக்குப் போய் ஒரு மெழுகு திரியைக் கொளுத்தி ஒரு பிரார்த்தனை செய்து போட்டு வருவங்கள்.

எட முள்ளிவாய்க்காலுக்கு அடிபடுகிறியள். நீயோ, நானோ போய் முன்னுக்கு நிக்கிறதெண்டு. அப்பிடி உதுக்கும் அபடுங்கோவன். ஏதாவதொரு அடையாளமாச் செய்தால் வாற சந்ததிக்கு என்ன நடந்தது எண்டாவது விளங்கும். இது நாட்டிலை ஒண்டும் நடக்காதமாதிரித் திரியிறம். அவைக்கு அடிவிழுந்ததைக் கூட வேறை ஆரேன் ஞாபகப் படுத்த வேண்டிக் கிடக்கு. கிரிச கெட்ட ஆக்கள் மாதிரியாப்போனம்.

மாநகர சபைதானே லைப்ரறிக்குப் பொறுப்பு அவை உதைச் செய்யாயினம். ஏனெண்டால் அதுக்கை தமிழ் கூட்டமைப்பு இருக்கெல்லே. அவைக்கு உதையெல்லாம் ஞாபகப்படுத்திறது அவ்வளவு விருப்பமில்லை. அவைதானே இப்ப மாநகரசபைக் கதிரையைப் பிடிச்சு வைச்சிருக்கினம். ஏன் உந்த வம்பு தங்களுக்கெண்டு அவை உதைப் பற்றிக் கதைக்காயினம். அதோடை சுமந்திரனுக்கும் உது விருப்பமிருக்காது. ஏனெண்டால் லைப்ரறி எரிச்ச கதையைக் கதைச்சால் சிங்களவரை மண் அள்ளித் திட்ட வேண்டிவரும். திட்டினால் பிறகு அவையிட்டை ஒண்டுக்கும் போகேலாது. நல்லெண்ணம் பாதிக்கும் எண்ட சாட்டைச் சொல்லிக் கொண்டு அவை பேசாமல் இருப்பினம். . அப்ப பொது சனம்தான் உதையெல்லாம் ஞாபகத்திலை வைச்சுக் கத்திக் குளற வேணும்.

லைப்ரறியிலை வேலை செய்யிற ஆக்களும் உதைத் தெரியாதமாதிரி விட்டிடுவினம். அவைக்குப் பிறகு பிரச்சினை எல்லே. உப்பிடி ஏதாவது கொண்டாட்டத்தைச் செய்தால் தங்கடை கதிரையளுக்குப் பிழை எண்டு அவை பேசாமல் இருப்பினம். அவையும் என்ன செய்யிறது. தங்கடை வயித்திலை தாங்கள் அடிக்க விரும்புவினமோ? அப்ப ஆரை ஆர் குற்றம் சொல்லிறது? பாக்க வேண்டியதைப் பாத்துக் கொண்டிருப்பம் எண்டு எல்லாரும் மௌனமா இருப்பினம். எதிலையும் ஒரு அரசியல் இருக்கெண்டது தெரியுதெல்லே. பிறகேன் கதையை. போய்ப் பாக்கிற வேலையைப் பாருங்கோ.

- வில்லங்கம் விநாசி

எதிரொலி Ethiroli
ஞாயிறு, 03 ஜூன் 2018 ethirolimedia@gmail.com

# தலை குனியும் காலம்

நின்ற வெள்ளத்தை வந்த வெள்ளம் கொண்டு போன கதை போலாகிவிட்டது வடமராட்சி கிழக்கு மீனவர்களின் நிலை. வடமராட்சி கிழக்கு தாழையடி, செம்பியன்பற்று, மாமுனை, நாகர்கோயில் பகுதிகளில் அத்துமீறி நூற்றுக்கும் மேற்பட்ட குடில்கள் வெளிமாவட்ட மீனவர்களால் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்தக் குடில்களில் ஏராளமான சிலிண்டர்கள் கொண்டு வந்து அடுக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இந்தச் சிலிண்டர்களின் உதவியுடன் தான், வடமராட்சிக் கிழக்குக் கடற்படுக்கையில் இருக்கும் கடலட்டைகளைப் பிடிக்க முடியும். உண்மையில் கடலட்டையைப் பிடிப்பதற்கு எல்லோருக்கும் அனுமதி கிடையாது. அனுமதி பெறாமல் தப்பித்தவறியேனும் கடலட்டைகளைப் பிடித்துக் கொண்டு யாரேனும் ஒரு தமிழ் மீனவர்கள் கரைக்கு வந்தால், மறுகணமே அவரது கையில் விலங்கு மாட்டப்பட்டு விடும்.

அந்தளவுக்குச் சட்டத்தை நிலை நாட்டுவதில் 'கண்ணும் கருத்துமாக' இருக்கும் கடற்படையும், பொலிஸூம் இப்போது நூற்றுக்கணக்கில் , இன்னொரு இன மக்களின் ஆளுகைக்குள் உள்ள கடற்கரையில் தம்மிஷ்டப்படி குடில்களை அமைத்து, தங்கியிருந்து, தொழில் செய்து, எவ்வித அனுமதியும் பெறாமல் கிலோக்கணக்கில் கடலட்டைகளைப் பகிரங்கமாகப் பிடித்து தென்னிலங்கைக்கு அனுப்பி வரும் சிங்கள் மீனவர்கள் மீது ஏன் எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை? சிங்கள இனத்தில் பிறந்து விட்டால், இலங்கையின் எல்லாக் கடற்பகுதிகளும் அவர்களுக்குச் சொந்தம் என்ற நிலை எப்போது உருவானது? யாரந்த அதிகாரத்தைக் கொடுத்தது?

முல்லைத்தீவு, நாயாற்றிலும் இதேபோன்றுதான் அடாத்தாகக் குடியேறிய சிங்கள மீனவர்களின் அத்துமீறிய, சட்டவிரோதத் தொழில் நடவடிக்கைகளை பொலிஸோ, அரசோ கட்டுப்படுத்தவில்லை. அதனால் இப்போது தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி விட, அங்கிருந்து வேறு இடத்துக்குப் போவது பற்றி அவர்கள் யோசித்து வருகிறார்கள்.

இப்படியான ஒரு நிலைமை தங்களின் பூர்வீக வாழ்வாதாரக் கடற்பகுதிக்கும் வந்துவிடுமோ என்ற அச்சமே, இரணைதீவு மக்களை, உயிரைப் பணயம் வைத்து, கடல் கடந்து சொந்த நிலத்துக்கு மீள வைத்தது. இல்லாவிட்டால் இன்னும் சில காலங்களில் கடற்படையின் அனுசரணையோடு அங்கும் சிங்கள மீனவர்கள் அத்துமீறிக் குடியேற்றப்பட்டு, அங்குள்ள கடல்வளமும் சூறையாடப்பட்டிருக்கும். தங்கள் நிலத்தை மட்டுமல்லாது, வாழ்வாதாரக் கடலையும் ஒரே சமயத்தில் இரணைதீவு மக்கள் மீட்டிருந்தனர்.

ஆனால், வடமராட்சி கிழக்கில் அத்துமீறிய சிங்கள் மீனவர்களின் அடாவடியை எதிர்த்து, ஜனநாயக வழியில் ஆர்ப்பாட்டம் செய்த மீனவர்களுக்கு கடற்படைப் புலனாய்வாளர்கள் கொலை மிரட்டல் விடுக்குமளவுக்கு இலங்கையின் ஜனநாயகம் சந்தி சிரிக்கிறது.

இதேபோன்று தென்னிலங்கையில் ஏதாவது ஒரு கடற்பகுதியில் போய் நின்று தமிழ் மீனவர்கள் இப்படி அடாத்தாகக் கடற்றொழிலில் ஈடுபட்டால் இந்த அரசும், சட்டமும் வாளாவிருக்குமா? அந்த மீனவர்களை அடுத்த நொடியே சிறைக்குள் தள்ளி விட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்கள். தமிழர்களாகப் பிறந்ததால் எல்லாவற்றையும் பார்த்து சகித்துக் கொண்டு வாழ வேண்டியது தான். நிமிர்வுக்கான யுகமும், யுக புருஷர்களும் போய்விட்ட பிறகு இனிக் குனிந்துதான் நடக்க வேண்டும் போலும்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# தொடர்ச்சிகள்

## சரணடைந்தோர்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாட்சியப்பதிவுக்கு ஒத்துழைக்கின்றோம் என குறிப்பிட்டனர். சுமார் பத்து வருடங்களாக வீதிகளில் போராடி வருகிறோம். பல்வேறு ஆணைக் குழுக்களுக்கு முன் சாட்சியமளித்தோம். எல்லாமே எமக்கு கண்துடைப்பாகவே இடம்பெறுகிறது எனவே இந்த அலுவலகத்தையும் நாம் நம்பத் தயாராக இல்லை .

அத்துடன் இந்த அலுவலகத்தை நம்புவதாக இருப்பின் காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகள் 100 பேரையாவது வெளிக்கொண்டு வந்து எமக்கு காட்டுங்கள். அல்லது இராணுவத்திடம்கையளித்து காணாமல்ஆக்கப்பட்டவர்களது பெயர்ப்பட்டியலை வெளியிடுங்கள். அதன் பின்னர் உங்கள் அலுவலகத்தை நம்புகிறோம் என தெரிவித்தனர்.

அதற்கு பதிலளித்த போதே சாலிய பீரிஸ் மேற்குறித்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

காணாமல் போனோரது உறவினர்களின் உணர்வை தம்மால் புரிந்துகொள்ளக்கூடியதாக உள்ளதென குறிப்பிட்ட சாலிய பீரிஸ், காணாமல் போனோரை கண்டு பிடிக்கலாம் என்ற நம்பிக்கையையும் வெளியிட்டார்.

இதேவேளை கடந்த காலங்களை போலல்லாது, காணாமல் போனோர் அலுவலகத்தின் செயற்பாடுகள் நம்பத்தகுந்த வகையில் அமையும் என்றும், மக்கள் தம்மீது நம்பிக்கை வைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

## ராஜபக்சக்கள்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு, ராஜபக்ச குடும்பத்துக்குள் கோத்தாபய, பசில் ராஜபக்ச, சமல் ராஜபக்ச ஆகியோர், தமது ஆதரவாளர்களின் மூலம் பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையிலேயே பேராசிரியர் ஜி.எல்.பீரிஸை ஜனாதிபதி தேர்தலில் நிறுத்த மகிந்த ராஜபக்ச முடிவு செய்திருப்பதாக கூறப்படுகிறது.

## போராட்டத்துக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளார். மருதங்கேணியில் தமிழ் மக்களுக்கு சொந்தமான நிலத்தில் நூற்றுக்கணக்கான வாடிகளை அமைத்து பெருமளவு சிங்கள மீனவர்கள் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள வடமராட்சி கிழக்கு மீனவர்கள் அவர்களை வெளியேற்றவேண்டும் என வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். இதன் காரணமாக தாங்கள் புலனாய்வுப்பிரிவினரின் கொலை மிரட்டலுக்கு உள்ளாகியுள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையிலேயே வடமராட்சி கிழக்கு- மருதங்கேணி பகுதியில் அடாத்தாக தங்கியுள்ள சுமார் ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட தென்பகுதி மீனவர்களை அங்கிருந்து வெளியேற்றுவது குறித்து ஆராய்வதற்கான கலந்துரையாடல் நேற்று மருதங்கேணி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

"மருதங்கேணியில் தங்கியிருக்கும் தென்பகுதி மீனவர்களை உடனடியாக வெளியேற்றவேண்டும் என மத்திய கடற்றொழில் அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்படும்.

அதற்கமைய எதிர்வரும் 5 ஆம் திகதிக்குள் தகுந்த பதில் அமைச்சரிடமிருந்து கிடைக்கவில்லையென்றால் அடுத்த நாளான 6 ஆம் திகதி பாரிய மக்கள் போராட்டம் ஒன்றுக்கு மக்கள் தயாராக இருக்கவேண்டும். அந்த போராட்டத்தில் நாமும் கலந்து கொள்வோம்.

அதற்கும் தகுந்த பதில் உடனடியாக கிடைக்கவில்லையாயின் அடுத்தகட்டமாக மிகப்பெரியளவில் மக்களை ஒன்று திரட்டி அரசியல்வாதிகளும் இணைந்து யாழ்ப்பாணத்தில் உள்ள கடற்றொழில் திணைக்களத்தை முற்றுகையிட்டு தொடர்ச்சியான போராட்டத்தை நடத்துவோம்" என்று தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலில் மாகாணசபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், எஸ்.சுகிர்தன் மற்றும் மருதங்கேணி பிரதேசசெயலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## 100 நாள்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

100 நாள் வேலைத்திட்டம் பகிரங்கமாக அறிவிக்கப்படும் முன்னர் நடைபெற்ற இறுதிப் பேச்சுவார்த்தையில் பொது வேட்பாளராக போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டார். அதில் திட்டம் குறித்து வார்த்தை வார்த்தையாக கலந்துரையாடப்பட்டது.

பொது வேட்பாளரை தெரிவு செய்யும் முன்னரே 100 நாள் வேலைத்திட்டம் தொடர்பான நிலைப்பாடுகள் காணப்பட்டன. மாதுளுவாவே சோபித தேரர் தலைமையிலான நீதியான சமூகத்துக்கான மக்கள் அமைப்பே முதலில் இந்த திட்டத்தை முன்வைத்தது. மாதுளுவாவே சோபித தேரர் உட்பட அவரது அமைப்பினர் 180 நாட்கள் வேலைத்திட்டங்களை முன்வைத்தனர். ஐக்கிய தேசியக் கட்சி அதனை 100 நாள் வேலைத்திட்டமாக குறைத்தது எனவும் ஜயம்பதி விக்ரமரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.

## பொன்சேகாவின்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி பெற்றுள்ளது. அதன் குத்தகைக் காலம் 2021ஆம் ஆண்டு மே 31ஆம் திகதி நிறைவடைகிறது.

இந்த கட்டடம் பிரதசே அபிவிருத்தி அமைச்சராக பதவி வகித்த போது, சரத் பொன்சேகாவால் பெறப்பட்டுள்ளது. எனினும் அண்மைய அமைச்சரவை மறுசீரமைப்பின் போது வனவிலங்குகள் அமைச்சும் பொன்சேகாவிடம் வழங்கப்பட்டது. இந்த நிலையில் இரண்டு அமைச்சுகளும் இணைக்கப்பட்டுள்ளதால் . வனவிலங்குகள் அமைச்சு அலுவலகத்திலிருந்து ராஜகிரியவிலுள்ள தனியார் கட்டடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

## கடத்தப்பட்ட... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றினுள் கடந்த வியாழக்கிழமை அதிகாலை 2 மணியளவில் வெள்ளை வான் ஒன்றில் வந்த கும்பல் தாயின் அரவணைப்பிலிருந்த 8 மாத ஆண் குழந்தையொன்றை கடத்தி சென்றது. குழந்தையின் தந்தை வெளிநாடு ஒன்றில் வசித்து வருவதாகவும் தாய்க்கும் தந்தைக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் இருப்பதாகவும் இருவரும் பிரிந்து வாழ்வதுடன் தந்தை குழந்தையை கடத்துவதாக எச்சரிக்கை விடுத்திருந்தார் என குழந்தையின் தாயார் விசாரணையில் தெரிவித்திருந்தார்.

விரைவாக செயற்பட்ட பொலிஸார் மோப்ப நாய் கொண்டு தேடுதலையும் விசாரணைகளையும் முன்னெடுத்திருந்தனர். இந்த நிலையில் குழந்தை நேற்று புதுக்குடியிருப்புப் பகுதியிலுள்ள வீடொன்றில் வைத்து மீட்கப்பட்டது.

## வன்னி மக்களுக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு ஆறு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் வாழ்கின்ற போதும், இரண்டு உளவியலாளர்கள் மாத்திரமே இருக்கின்றனர்.

கிளிநொச்சியில் இயங்கும் தன்னார்வ அமைப்பு ஒன்றின் தகவலுக்கு அமைய, வடக்கு, கிழக்கில் மாதாந்தம் 30 பெண்கள் தற்கொலைக்கு முயற்சிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியல் கைதிகள் விவகாரம் ,குடும்பத் தலைவர்கள் இழப்பு என பல காரணங்களால் இத்தகைய நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

வடக்கில் போதிய அளவு உளவியல் மருத்துவ நிபுணர்கள்இல்லாதுள்ளமைபற்றிசுட்டிக்காட்டப்பட்டுவருகின்ற போதும் அது தொடர்பில் சுகாதார அமைச்சு அக்கறையற்றிருப்பதாகவும் சொல்லப்படுகின்றது.

## புதிய கட்சி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"வடக்கு மாகாண முதல்வர் தலைமையில் புதிய கட்சி ஆரம்பிப்பது தேவையற்றதாகவே கருதுகிறேன். இங்கே புதிய கட்சி ஒன்று வேண்டாம். தமிழ் தேசிய கூட்டமைப்பை தவறாக வழிநடத்தும் சம்பந்தனின் தலைமையை மாற்றி புதிய தலைமை மக்கள் முன் ஏற்றால் போதும்" என்று தெரிவித்தார்.

## டெங்கால்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் மாலை உயிரிழந்துள்ளார்.

அத்துடன் இறந்தவர் எலிக்காய்ச்சலினாலும் இறந்திருக்கக்கூடிய சந்தேகங்கள் இருப்பதனால் அவரது மாதிரிகள் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தேசிய தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவின் இணையத்தள தரவுகளின் படி கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வருடம் இதுவரை 126 டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர். எண்ணிக்கையின் அடிப்படையில் வடக்கில் கிளிநொச்சி மாவட்டமானது 03ஆம் இடத்தில் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## யாழில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு, கம்பஹா, மாத்தறை, இரத்தினபுரி, கண்டி, கேகாலை, காலி, களுத்துறை மற்றும் குருணாகல் ஆகிய 12 மாவட்டங்களில் டெங்கு நோய்த் தொற்று ஆபத்து அதி உச்சம் கொண்ட மாவட்டங்களாக 2016, 2017 மற்றும் 2018 முதல் 5 மாதங்களின் புள்ளி விபரங்களின் மூலம் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

அம்பாந்தோட்டை, புத்தளம், பதுளை, கல்முனை, அநுராதபுரம் மொனாரகல, பொலனறுவை மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்கள் டெங்கு நோய்த் தொற்று ஆபத்து உச்சமாக உள்ள மாவட்டங்களாக உள்ளன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், அம்பாறை, வவுனியா மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்கள் டெங்கு தொற்று சராசரியாக காணப்படும் மாவட்டங்களாக உள்ளன.

2017ஆம் ஆண்டைவிட 2018ஆம் ஆண்டு முதல் 5 மாதங்களிலும் டெங்குநோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வர்த்தமானி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தநிலையில் நாடாளுமன்ற பிரதி செயலாளர் நாயகம் நீல் இத்தாவல குறித்த விடயம் தொடர்பில் தெரிவிக்கையில், சட்டமா அதிபரினால் குறித்த வரைபு ஆராயப்பட்டதன் பின்னர் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும். அதன் பின்னரே விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் என குறிப்பிட்டார்.

## இன்று நாளும் கோளும்

03.06.2018 ஞாயிற்றுக்கிழமை விளம்பி வருடம் வைகாசி மாதம் 20 ஆம் நாள்

பஞ்சமி பகல் 05.15 வரை | பூராடம் மு.ப. 08. 28 வரை | குளிகை மு.ப. 03.00-07.30
இராகுகாலம் 04.30- 06.00 | சுபநேரம் காலை 06.30 - 07.30 | எமகண்டம் 12.00 - 01.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சோர்வு | பகை | நன்மை | பெருமை | நற்செயல் | இலாபம் | புகழ் | ஊக்கம் | முயற்சி | உயர்வு | உழைப்பு | வெற்றி |

# 2 பெண்கள் வெட்டிக் கொலை

கொஸ்கம, ஜூன் 03

கொஸ்கம - சீதாவக்கப் பகுதியில் கூரிய ஆயுதம் ஒன்றால் தாக்கப்பட்டு, இரு பெண்கள் மர்ம நபர்களால் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

34 வயதுடைய பெண் ஒருவரும், 78 வயதான அவருடைய பாட்டியுமே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் தீவிரப்படுத்தி உள்ளனர். (ஆ)

# 4 ஆவது தடவையும் இலங்கைக்குக் கடன்

கொழும்பு, ஜூன் 03

சர்வதேச நாணய நிதியம் நான்காவது தடவையாக இலங்கைக்கு 252 மில்லியன் அமெரிக்க டொலரைக் கடனாக வழங்கத் தீர்மானித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தால் மூன்று வருடங்களுக்கு விரிவாக்கப்பட்ட நீடிக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்தின் கீழான, இலங்கைப் பொருளாதாரத்தின் செயற்பாடுகள் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகக்குழு நான்காவது மீளாய்வை நிறைவுசெய்துள்ளது. இதன்போதே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கைக்கு 1.1 மில்லியன் அமெரிக்க டொலரைக் கடனாக வழங்குவதற்கான மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்ட திட்டமானது, 2016 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3 ஆம் திகதி சர்வதேச நாணய நிதியத்தால் உத்தியோபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்தவகையில் தற்போது 252 மில்லியன் அமெரிக்க டொலரைக் கடனாக வழங்குவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவ இயக்குநர் மிட்சுகிரோ புறுசவா, "இலங்கை நீடிக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்தின் கீழ் குறிப்பிடத்தக்க முக்கியமான முன்னேற்றங்களைப் பதிவு செய்துள்ளது. நிதி ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கான கொள்கைத்திட்ட உருவாக்கம், விவேகமான பணக்கொள்கை, உட்கட்டமைப்பு வசதி விரிவாக்கத்தின் உதவியுடனான பொருளாதார விருத்தி ஆகியவற்றை இலங்கை உறுதியுடன் செயற்படுத்தி உள்ளது." எனத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தால் இலங்கைக்கு இதுவரை 1014 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

பிணைமுறி விவகாரம்:

# 118 எம். பிக்களின் பெயர்களும் வெளியிடப்பட வேண்டும்!

## சமல் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 03

மத்திய வங்கிப் பிணைமுறி மோசடியுடன் தொடர்புபட்ட நிறுவனத்திடமோ அல்லது நபர்களிடமோ பணம்பெற்றதாகக் கூறப்படுகின்ற 118 நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களை ஜனாதிபதி விரைவில் வெளியிடாவிட்டால் அது நாட்டு மக்களுக்கும், எஞ்சிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் செய்யும் துரோகம் என்று முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

சந்தேகத்துக்கிடமான வகையில் பணம் பெற்றுள்ளதாகக் கூறப்படும் 118 நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களை வெளியிடுமாறு சபாநாயகர், ஜனாதிபதி செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இதுகுறித்துப் பேசுகையிலேயே சமல் ராஜபக்ச இவ்வாறு தெரிவித்தார்.

"இலங்கை மத்திய வங்கிப் பிணைமுறி மோசடியுடன் குற்றம் சுமத்தப்பட்டுள்ள அர்ஜூன் அலோசியஸுக்குச் சொந்தமான நிறுவனத்திடம் இருந்து பணம் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் 118 பேரின் பெயர்களையும் வெளியிடுவது அவசியமாகும். இல்லையெனில், 225 பேரும் சந்தேகத்துக்குரியவர்களாகி விடுவார்கள். ஆகவே அரசாங்கம்அவ்வாறானதொரு தவறைச்செய்யக்கூடாது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் ஏதேனும் குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டால், அது குறித்து சபாநாயகர் சம்பந்தப்பட்ட தரப்பிடம் விளக்கம் கோரினால் தகவல்களை வழங்க வேண்டும். ஆனால், ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு விசாரணையின் இறுதியில் அறிக்கையை ஜனாதிபதியிடமே ஒப்படைக்கும். இந்த நிலையில், இறுதித் தீர்மானம் ஜனாதிபதி வசமாகின்றது. அவர் விரும்பினால் அறிக்கையின் முழு விவரத்தையும் வெளியிட முடியாது.

யாரையேனும் பாதுகாக்க விரும்பினால் அல்லது அந்த அறிக்கையின் விடயங்களை வெளிப்படுத்த விரும்பாத பட்சத்தில் ஜனாதிபதி அதனை மேற்கொள்ள முடியும். ஏனென்றால் நிறைவேற்று அதிகாரம் காணப்படுகின்றது. எவ்வாறாயினும் மத்திய வங்கிப் பிணைமுறி மோசடி என்பது நாட்டில் அனைவருக்கும் தெரிந்த விடயமாகும். இது குறித்த விசாரணைகளும் மக்களின் அவதானத்துக்கு உட்பட்ட விடயமாகும். எனவே குறித்த பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய நிறுவனத்திடமோ அல்லது நபர்களிடமோ பணம் பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்ற 118 பேரின் பெயர்களை வெளியிட வேண்டியது நல்லாட்சி அரசாங்கத்தின் கடப்பாடாகும். விசாரணை அறிக்கையில் குறித்த பெயர்கள் திட்டமிட்ட வகையில் மறைக்கப்பட்டால் அது மக்கள் விரோதச் செயற்பாடாகும்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)



# சீனப் படை அதிகாரிகள் இலங்கை விஜயம்!


கொழும்பு, ஜூன் 03

தியத்தலாவவில் உள்ள இராணுவப் பயிற்சி அக்கடமியில் சீனாவின் நிதியில் கட்டப்பட உள்ள அரங்க வளாகத்துக்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்காக சீனப் படை அதிகாரிகள் குழுவொன்று இலங்கை வந்துள்ளது.

சீன இராணுவத்தின் கேணல் சாங் லூஹூவா தலைமையிலான இந்தக் குழுவினர், இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தி உள்ளனர்.

இதன் போது, சீனாவின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டம் தொடர்பாகவும், ஏனைய தொழில்நுட்ப உதவிகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது. (ஆ)

# அமெ.பசுபிக் அதிகாரிகள் இலங்கையில் கள ஆய்வு!



கொழும்பு, ஜூன் 03

அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப் பீடத்தைச் சேர்ந்த கப்டன் ஜெப்ரி பென்டன் தலைமையிலான நான்கு படை அதிகாரிகளைக் கொண்ட குழு, கொழும்புக்கு விஜயம் மேற்கொண்டுள்ளது.

இலங்கையில் முன்னெடுக்கப்படும் சிவில்- இராணுவ ஒத்துழைப்புத் திட்டங்கள் தொடர்பாக ஆராய்வதற்காகவே அமெரிக்கப் படை அதிகாரிகள் குழு இங்கு வந்துள்ளது.

அமெரிக்கப் படை அதிகாரிகளின் இந்தக் குழு, நேற்றுமுன் தினம் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவைச் சந்தித்துக் கலந்துரையாடியது.

இதன்போது, 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த பின்னர் வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்பட்ட சிவில்- இராணுவ ஒத்துழைப்புத் திட்டங்கள் தொடர்பாக இராணுவத் தளபதி விளக்கிக் கூறியுள்ளார். (ஆ)



## வாழ்வாதார உதவி

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 41 குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள் வடமாகாணசபை உறுப்பினர் ப. சத்தியலிங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு வவுனியாவில் நேற்றுக்காலை கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெற்றது.

இதன்போது, இறம்பைக்குளம், பண்டாரிக்குளம், ஈச்சங்குளம், மரக்காரம்பளை, பூவரசங்குளம், நெளுக்குளம் ஆகிய பகுதிகளை சேர்ந்த வறிய மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களை சேர்ந்தவர்களுக்கு 7 ஆயிரத்து 720 ரூபா பெறுமதியான 25 கோழிக்குஞ்சுகளும், உணவுப் பாத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. இதில், நகரசபை உறுப்பினர் தி.செந்தில்ரூபன், வவுனியா தெற்குப் பிரதேச சபை உறுப்பினர் போ.மங்களநாதன், தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஆ)

# ஏற்றுமதி வருவாய் நாட்டில் உயர்வு!

கொழும்பு, ஜூன் 03

இலங்கையின் வர்த்தக ஏற்றுமதிகள் மூலமான வருவாய் கடந்த மார்ச் மாதத்தில் 1.1 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது. இது மிக உயர்வான ஏற்றுமதி வருவாயாகும் என மத்திய வங்கி ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளது.

"கடந்த வருடம் மார்ச் மாதத்தில் பதிவு செய்யப்பட்ட வர்த்தக ஏற்றுமதி வருமானத்தை விடவும் இந்த ஆண்டு மார்ச் மாதம் மிக உயர்வான வர்த்தக ஏற்றுமதி வருமானம் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இலங்கையில் 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இருந்து கைத்தொழில் ஏற்றுமதிகளில் ஆடை ஏற்றுமதிகள் மூலமாகவே அதிக வருமானம் பெறப்பட்டுள்ளது. அமெரிக்காவின் வர்த்தகச் சந்தையில் இலங்கையின் ஆடை ஏற்றுமதிகளுக்கான கேள்வி அதிகரித்தமை அதற்கு காரணமாக அமைந்தது. ஆனால், இந்த வருடம் மார்ச் மாதத்தில் மாணிக்கம், வைரம் மற்றும் ஆபரணங்கள் ஏற்றுமதி மூலமே அதிக வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. அத்துடன் மாணிக்க ஏற்றுமதி வருமான அதிகரிப்பில் மிக உயர்வான பங்களிப்பைச் செய்துள்ளது.

தொழில்நுட்ப உபகரணங்கள், இலத்திரனியல் உபகரணங்களின் ஏற்றுமதியும் குறிப்பிடத்தக்க அளவு அதிகரிப்பைக் காட்டுகின்ற அதேவேளை, போக்குவரத்து உபகரண ஏற்றுமதி வெகுவாகக் குறைந்துள்ளது. விவசாய உற்பத்திகளில் தேயிலை தவிர்ந்த ஏனைய உற்பத்திகள் அனைத்திலும் ஏற்றுமதி குறைந்துள்ளது.

மேலும், தென்னை உற்பத்தி ஏற்றுமதிகளும், விசேடமாக தேங்காய் எண்ணெய் ஏற்றுமதி ஆகியன காலநிலை மாற்றம் காரணமாக வீழ்ச்சி கண்டுள்ளது. அமெரிக்க, பிரித்தானியா, இந்தியா, ஜேர்மனி மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான பிரதான சந்தைகளாக அமைந்துள்ளன. மேற்படி நாடுகளுக்கு 52 வீதமான வர்த்தக ஏற்றுமதிகளை இலங்கை மேற்கொண்டுள்ளது." எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஆ)

# இன்புளுவென்சா தாக்கி இதுவரை 14 பேர் பலி

கொழும்பு, ஜூன் 03

தென் மாகாணத்தில் ஏற்பட்டுள்ள க இன்புளுவென்சா காய்ச்சல் காரணமாக இதுவரை 14 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பிரதி சுகாதார அமைச்சர் பைசல் காசிம் தெரிவித்தார்.

இன்புளுவென்சா வைரஸ் நோய் பரவுகை மற்றும் அதனை கட்டுப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கை தொடர்பில் ஊடகங்கள் கேள்வி எழுப்பியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"தற்போது பரவிவரும் இன்புளுவென்சா வைரஸ் காய்ச்சல் கடந்த வருடம் மத்திய மாகாணத்தில் ஏற்பட்டது. அதேபோல் தற்போது வைத்தியசாலைகளில் இந்த நோய் அறிகுறிகளுடன் வரும் நோயாளிகளைக் கண்காணிப்பதற்கென 19 பொது கண்காணிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அரச வைத்தியசாலைகளுக்கு வருகை தரும் நோயாளிகள் தொடர்பில் இந்த நிலையங்களால் கண்காணிக்கப்படும். தனியார் வைத்தியசாலைகளுக்கு இவை தொடர்பில் எந்தவித அறிவுறுத்தல்களும் வழங்கப்படவில்லை.

தற்போது நீர்கொழும்பு பகுதியில் டெங்கு காய்ச்சல் அபாயம் நிலவுகின்றது. எனினும், அங்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகள் அதற்கேற்றவாறான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடன் இலங்கைக்கு வருகை தருகின்றனர். ஆகையால், அவர்கள் நோய் தொற்றுக்கு உள்ளாவதில்லை. ஆனால், எமது மக்கள் காய்ச்சலுக்கான அறிகுறிகள் தென்பட்டவுடன் தனியார் வைத்தியசாலைகளை நாடிச்செல்கின்றனர். பின்னர் நோய் நிலைமை அதிகரித்ததுமே அரச வைத்தியசாலைகளுக்கு வருகின்றனர். எனவே நிலவும் நோய் நிலைமைகள் தொடர்பில் மக்கள் அவதானத்துடன் செயற்படுவதன் மூலமே அவற்றைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியும்." என் றும் அவர் தெரிவித்தார். (ஆ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 03.06.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.